ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 896/2 – 1995 නොවැම්බර් 07 වැනි අඟහරුවාදා – 1995.11.07
896/2 ஆம் இலக்கம் – 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
No. 896/2 – TUESDAY, NOVEMBER 07, 1995

ச. வ.— பி 21/78 IV.

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

### 21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரண ஆகிய நான் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இக்கட்டளை மூலம் —

(i) சமூக அறிவியல், மானிடவியல், முகாமைக் கற்கைகளும் வர்த்தகமும், கமத்தொழிலும் விஞ்ஞானமும் ஆகிய படிப்புத் துறைகளில் உயர் கல்வியை அளிக்கும், மேம்படுத்தும், அத்துடன் அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக, இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டிய பல்கலைக்கழகமொன்றை 1995 நவெம்பர் 07 ஆந் தேதியிலிருந்து தாபிக்கின்றேன்.

(ii) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு "இலங்கைச் ரஜரட்ட பல்கலைக்கழகம்" என்ற பெயரையும் மருடத்தையும் குறித்தொதுக்குகின்றேன் ;

(iii) அத்தகைய பல்கலைக்கழகத்தின் பீடம் அனுராதபுர நிருவாக மாவட்டத்தில் இருக்க வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ;

(iv) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கான சமூக அறிவியல், மானிடவியல், முகாமைக் கற்கைகள், கமத்தொழில் விஞ்ஞானங்கள், அத்துடன் பிரயோக அறிவியல் என்பவற்றிற்கான துறைகளைக் குறித்தொதுக்குகின்றேன் ;

(v) இதற்கான அட்டவணையின் நிரை 1 இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ள அத்தகைய பல்கலைக்கழகத்தின் துறை ஒவ்வொன்றும், அந்த அட்டவணையின் நிரை 2 இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் கற்கைப் பகுதிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

றிச்சர்ட் பத்திரண,
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு.
1995 நவெம்பர் 03.

அட்டவணை

| நிரை 1 | நிரை 2 |
|---|---|
| சமூக அறிவியல் மானிடவியல் துறை | சமூகக் கற்கைகள் பகுதி<br>மானிடவியல் பகுதி |
| முகாமைக் கற்கைகள் துறை | தொழில் முகாமைப் பகுதி<br>கணக்கியல் நிதிப் பகுதி |
| கமத்தொழில் துறை | பெருந்தோட்ட முகாமைப் பகுதி<br>பூந்தோட்ட வளர்ப்புப் பகுதி<br>உணவுத் தொழினுட்பவியல் பகுதி |
| பிரயோக அறிவியல் துறை | உயிரியல் விஞ்ஞானப் பகுதி<br>பௌதிக விஞ்ஞானப் பகுதி<br>கைத்தொழில் முகாமை அத்துடன்<br>கணனிக் கற்கைகள் பகுதி<br>மனையியல் பகுதி |

11 – 450/2